(உ) கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை அணையிலிருந்து குடிநீருக்காக தண்ணீர் திறத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள். திரு. கு.க. செல்வம் பேசியதைப்போல் நீங்களும் சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட விவசாயிகளுடைய உயிர்நாடியாக இருப்பது பேச்சிப்பாறை அணையாகும். பேச்சிப்பாறை அணை வழக்கமாக ஜூன் மாதத்தில் திறக்கப்படும் என்ற அடிப்படையில், விவசாயிகள் கடந்த மாதம் நாற்று நடும் பணிகளையெல்லாம் தொடங்கிவிட்டார்கள். ஆனால், பருவமழை பொய்த்துவிட்ட காரணத்தாலும், பாசனத்திற்காக அணை திறக்கப்படாத காரணத்தாலும், நடப்பட்ட நாற்றுகள் அனைத்தும் கருகிப் போகக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், அணையிலிருந்து வரக்கூடிய தண்ணீர், எனது தொகுதிக்குட்பட்ட தோவாளை சேனல், என்.பி. சேனல், அனந்தனார் சேனல் உள்ளிட்ட மாவட்டத்திலுள்ள அனைத்து சேனல்களுக்கும் வராத காரணத்தால், நிலத்தடி நீர் குறைந்து, திறந்தவெளி கிணறுகளும், ஆழ்குழாய்க் கிணறுகளும் வறண்டுபோய், மக்களுக்கு மிகப்பெரிய அளவில் குடிநீர்ப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அணையைத் திறக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தொடர்ந்து நானும் கோரிக்கை வைத்திருக்கின்றேன். பொதுமக்களும், விவசாயிகளும் கருகிய நாற்றுகளோடு சென்று போராட்டம் நடத்தி, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரிக்கை வைத்திருக்கின்றனர். அதன் அடிப்படையில், மாவட்ட ஆட்சியரிடமிருந்தும், பொதுப் பணித் துறை நிருவாகத்திடமிருந்தும் அணையைத் திறப்பதற்கு அனுமதி கேட்டு கோப்பு அரசிற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். உட்காருங்கள்.

(ஊ) ஜெயங்கொண்டம், அனல் மின் திட்டம், நிறைவேற்ற வலியுறுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்.

2017 ஜூலை 19]

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மற்றும் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், தகவல் கோருவதற்கு அனுமதியளித்த நடுநிலைத் தவறாத பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்திற்காக 13 வருவாய் கிராமங்களில் 8,372 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, 21–10–2005–ல் டிட்கோவிடம் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டது. அதற்காக guideline value *அடிப்படையில் ரூ.37,71,00,332/– டிட்கோமூலம் டெபாசிட் செய்யப்பட்டுள்ளது. இதனால் நில உரிமையாளர்கள் ஜெயங்கொண்டம் சிறப்பு சார்பு நீதிமன்றத்தில் 9,751 பேர் வழக்கு தொடுத்து, 6,974 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டு, 31–5–2017 வரை 500,48,09,287/– ரூபாய் இழப்பீட்டுத் தொகை செலுத்த வேண்டும். நில உரிமையாளர்கள் 20 வருடங்களாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம், உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன என்பதை சுருக்கமாகக் கேட்டுவிட்டு அமருங்கள். விரிவாகப் பேச வேண்டாம்.*

திரு. ஜெ.கே.என். ராமஜெயலிங்கம்: *நில உரிமையாளர்கள் 20 வருடங்களாக நிலத்தை இழந்து, வீட்டை இழந்து பரிதாப நிலையில் உள்ளனர். வீட்டில் குடியிருக்கிறார்கள்; ஆனால் உரிமையில்லை. நிலத்தில் பயிர் செய்கிறார்கள்; ஆனால் உரிமை இல்லை. இதனால் நிலத்தினை மேம்பாடு செய்ய முடியவில்லை. நல்ல வீடு கட்டிக்கொள்ள முடியவில்லை. நிலத்தை விற்கவோ, அடமானம் வைக்கவோ முடியவில்லை. தங்கள் பிள்ளைகளை மேற்படிப்பு படிக்க வைக்க வங்கியில் கடன் வாங்க முடியவில்லை. வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை வழங்கப்படவில்லை. இதனால் அவர்களின் வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, ஜெயங்கொண்டம் அனல் மின் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு சாத்தியமுள்ளதா என அறிய உயர்மட்டக் குழு அமைக்க வேண்டும். சாத்தியமென்றால் மெகா லோக் அதாலத் வைத்து அனைத்து வழக்குகளுக்கும் சமாதான முறையில் தீர்வுகண்டு பட்டாதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும்.*

சாத்தியமில்லையென்றால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தினை உரிமையாளர்களிடமே இழப்பீட்டுடன் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு தமிழக முதல்வர் மற்றும் மாண்புமிகு தொழில் துறை அமைசசர் ஆகியோரிடம் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள்.

(எ) தாம்பரம் தொகுதி, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள். சுருக்கமாகக் கேளுங்கள். இல்லையெனில் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க நேரிடும்.

***திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்மல், நாகல்கேணி, பொழிச்சலூர், திருநீர்மலைப் பகுதிகளில் 200–க்கும் மேற்பட்ட சாயப் பட்டறைகள், தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவற்றின் கழிவுநீர் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்படுவதால், கால்வாய் வழியாகச் சென்று, மணப்பாக்கம் check dam–ல் தேங்குவதால், முகலிவாக்கம், மணப்பாக்கம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கிராமங்களின் நிலத்தடி நீர் கெட்டுப் போகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(ஏ) நெய்வேலி அனல் மின் நிலையம், ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், நெய்வேலி NLC India நிறுவனத்தில் பணியாற்றுகிற 9,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள், 26 பணி நாட்கள் வேலை கேட்டு, கடந்த 8 நாட்களாக போராடி வருகின்றார்கள். போராடி வருகின்ற தொழிலாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுகின்றவகையில், அவர்களுடைய கோரிக்கையைப்